**13 வருடங்கள் உத்தரவாதப்படுத்தப்பட்ட கல்வி நிகழ்ச்சித் திட்டத்திற்காக இணைத்துக் கொள்ளப்பட்ட புதிய ஆசிரியர்களுக்காக நடாத்தப்படும் சேவைக்கு முன்பதான வதிவிட ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - 2018**

அரசாங்கத்தின் முன்னணி நிகழ்ச்சித் திட்டமொன்றாக அமுல்படுத்தப்பட ஆரம்பிக்கப்பட்டுள்ள மேற்படி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் புதிய வாண்மைசார் பாடங்கள் 26 ஐ கற்பிப்பதற்காக கல்வி அமைச்சினால் இணைத்துக் கொள்ளப்பட்ட புதிய பட்டதாரி ஆசிரியர்களுக்கான சேவைக்கு முன்பதான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் அவ்வப் பாடத் தொகுதிகளுக்குக்கேற்றவாறு கீழ்வருமாறு தேசிய கல்வியியற் கல்லூரிகளில் 2018.08.06 ஆந் திகதி ஆரம்பித்து 2018.08.24 ஆந் திகதி வரை இடம்பெறுவதற்கு கல்வி அமைச்சும் தேசிய கல்வி நிறுவகமும் ஒன்றிணைந்து திட்டமிட்டுள்ளது.

| தொடர் இல. | பாடத் தொகுதி | பாடம் | தெரிவு செய்யப்பட்ட கல்வியியற் கல்லூரி |
|---|---|---|---|
| 1 | சுகாதாரமும் சமூக சேவைகளும் | 1. பிள்ளை உளவியலும் பாதுகாப்பும்<br>2. சுகாதாரமும் சமூக பாதுகாப்பும்<br>3. உடற்கல்வியும் விளையாட்டும் | நில்வளா - தேசிய கல்வியியற் கல்லூரி |
| 2 | சமூக கலாசார கற்கைகள் | 4. ஆற்றுகைக் கலைகள்<br>5. பணிச் செயற்பாட்டு முகாமைத்துவம்<br>6. கைத்திறன் கலைகள் | பிங்கிரிய - தேசிய கல்வியியற் கல்லூரி |
| 3 | வடிவமைப்பு | 7. உள்ளக வடிவமைப்பு<br>8. நவநாகரிக வடிவமைப்பு<br>9. வரைவியல் வடிவமைப்பு<br>10. கலையும் வடிவமைப்பும்<br>11. நிலத் தோற்ற வடிவமைப்பு | பஸ்துன்ரட்ட - தேசிய கல்வியியற் கல்லூரி |
| 4 | விவசாயமும் உணவுத் தொழில் நுட்பமும் | 12. பிரயோகப் பூங்கனியியல் கற்கைகள்<br>13. கால்நடை உற்பத்திக் கற்கைகள்<br>14. உணவுப் பதனிடற் கற்கைகள்<br>15. நீர்வளக் கற்கைகள்<br>16. பெருந்தோட்ட உற்பத்திக் கற்கைகள் | சியன - தேசிய கல்வியற் கல்லூரி |
| 5 | தொழில்நுட்பக் கற்கைகள் | 17. நிர்மாணக் கற்கைகள்<br>18. பெருந்தோட்ட உற்பத்திக் கற்கைகள்<br>19. மின் மற்றும் இலத்திரனியற் கற்கைகள்<br>20. புடைவை ஆடைக் கற்கைகள்<br>21. உலோக உருவமைப்புக் கற்கைகள்<br>22. அலுமினிய உருவமைப்புக் கற்கைகள் | |
| 6 | சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் சேவைகள் | 23. சுற்றுலாவும் விருந்தோம்பல் சேவைகளும் | றுகுணு - தேசிய கல்வியியற் கல்லூரி |
| 7 | சூழல் தொடர்பான கற்கைகள் | 24. சூழலியற் கற்கைகள் | மகரகம - தேசிய கல்வியியற் கல்லூரி |
| 8 | வலைத்தள வடிவமைப்பும் மென்பொருள் அபிவிருத்தியும் | 25. மென்பொருள் அபிவிருத்தி<br>26. வலைத்தள அபிவிருத்தி | |
| 9 | தமிழ்மொழி மூலமான ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் (எல்லாப் பாடத் தொகுதிகளுக்கும்) | | ஸ்ரீபாத - தேசிய கல்வியியற் கல்லூரி |

கல்வித்துறையின் முன்னணி நிகழ்ச்சித் திட்டமொன்றை ஆரம்பிப்பதற்காக முன்னோடியாகத் தெரிவு செய்யப்பட்ட உங்களுக்கு, பாடசாலைகளில் அப்பணிகளை மிகவும் சிறப்பானதாக மேற் கொள்வதனை வழிகாட்டுவதற்கு கீழே குறிப்பிட்டவாறு இந்நிகழ்ச்சித் திட்டம் இரு கட்டங்களின் கீழ் செயற்படுத்தப்படவுள்ளது.

| பயிற்சி நிகழ்ச்சி | உள்ளடக்கம் | நாட்களின் எண்ணிக்கை | கால வரையறை | நிலையம் |
|---|---|---|---|---|
| கட்டம் - 1 | புதிய பட்டதாரி ஆசிரியர் களுக்குப் பயிற்சியளிப்பதற் காகத் தயாரிக்கப்பட்டுள்ள கல்வித் தத்துவங்கள், முறையியல்கள், கற்றல்-கற்பித்தல் உபகரணங்களின் பாவனை பற்றியதான விசேட கருப்பொருட்கள் | 19 | 06.08.2018 தொடக்கம் 24.08.2018 வரை | அவ்வத் தொகுதிகளுக்குரிய பாடங்களுக்கு அமைவாகத் தெரிவு செய்யப்பட்ட தேசிய கல்வியியற் கல்லூரிகள் |
| கட்டம் - 2 | வாண்மைசார் பாடங்களின் உள்ளடக்கம், கணிப்பீட்டு முறைகள் மற்றும் செய்முறைப் பயிற்சி | 10 | 27.08.2018 தொடக்கம் 05.09.2018 வரை | அவ்வப் பாடத்துறைகள் மற்றும் தொடர்புடைய செய்முறைகளுக்காகத் தெரிவு செய்யப்பட்ட பல்வேறு நிறுவனங்கள் மற்றும் தேசிய கல்வி நிறுவகம் |

இதன்படி மேற்குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்காக 06.08.2018 ஆம் திகதி அன்று முற்பகல் 9.30 மணிக்கு முன்னர் கீழே குறிப்பிடப்படும் பொருட்களுடன் தங்களது பாடத்திற்குரிய பயிற்சி நடைபெறும் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்குச் சமுகமளிக்கவும்.

## எடுத்து வரவேண்டிய பொருட்களின் விபரம்:

(1) 19 நாட்களுக்கும் தேவையான ஆடைகளும் அவசியமானவைகளும்

(2) படுக்கை விரிப்புகள், போர்வை மற்றும் தலையணை

(3) செயலமர்வுகளுக்கான ஆடைகள்

பெண்கள் - சாரி - ரவிக்கை (வெள்ளை நிறம் மிகவும் பொருத்தமானது)
தலைமயிர் சீராக சீவப்பட்டு கட்டியிருத்தல் வேண்டும்.

ஆண்கள் - கறுப்பு நிற நீண்ட காற்சட்டை (trouser), வெள்ளை மற்றும் வெளிறிய மேற்சட்டை - (கழுத்துப்பட்டி தேவையானவிடத்து)
தலைமயிர், மீசை என்பன சீராக வெட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

(4) விளையாட்டுப் பயிற்சிகளுக்கான ஆடைகள் ஆண், பெண் (கீழ்ச்சட்டை, ரீ. சேர்ட், சப்பாத்து, காலுறை)

(5) அழகியற் பாடங்களுக்கான ஆடைகள்:
நடனப் பயிற்சிகளுக்கான ஆடைகள் (ஜீன்ஸ், சிறப்பும் தேர்ச்சிமிக்க நடனத்தை வெளிப்படுத்து வதற்கான பொருத்தமான ஆடை, அணிகள்)
சித்திரம் பயில்வதற்கான பெஸ்டல், பென்சில்கள், அழிறப்பர் மேலும் உற்சாகப்படுத்தல் செயற்பாடுகளுக்கான பொருத்தமான இசைக்கருவிகள்.